**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 170/2024 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | சாந்தாமணி |
| Father Name | : | சீரங்கன் |
| Village | : | முத்தூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 65 |

Both Accused are present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது முத்தூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டில் உள்ள அவர்களது தாத்தா வீட்டில் இருந்து வருகிறார். எனது தங்கை ஜோதி ஒட்டசச்சத்திரத்தில் இருக்கிறார்கள். எனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் அவரது மகள் சந்தியா என்னை பார்க்க அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து செல்வார். அப்போது எதிரி அபிஷேக்கிற்கும், சந்தியாவிற்கு பழக்கம் ஏற்பட்டுள்ளது. அதனை தெரிந்துகொண்ட எனது மகன் பாலசச்சந்திரன் எதிரி அபிஷேக் சந்தியாவிற்கு அண்ணன் முறை ஆவதால் அவருடன் பழகவேண்டாம் என்று கூறினார். அதன் பேரில் சந்தியாவும் அபிஷேக்கிடம் பேசுவதை நிறுத்திவிட்டார். கடந்த 2024 ஆம் வருடம் தேதி தற்போது ஞாபகம் இல்லை. மாலை 7.00 மணி சுமாருக்கு எனது மகன் எங்களது வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் வந்து எனது மகனை பார்த்து ஏன்டா தேவடியா மகனே என்றும், அதில் விக்னேஷ் என் மகனை பார்த்து ஏன்டா தாயோழி அபிஷேக்கூட சந்தியாவை பேசவேண்டானு சொன்ன என்று சொல்லி தென்னை மட்டையில் அடித்துவிட்டார். அதில் எனது மகனுக்கு காதில் காயம் ஏற்பட்டது. பின்னிட்டு என்னை பார்த்து இருவரும் ஏண்டி மொண்டி தேவடியா, மொண்டி கண்டாரோழி எதுக்கு உன் பயனுக்கு சொல்லிக்கொடுத்து பேசவேண்டானு சொல்றியா என்று கூறி விக்னேஷ் எனது கைகளை பிடித்துக்கொண்டார். அப்போது அபிஷேக் கல்லாலும், இரும்பு பைப்பாலும் வலது கால்

மற்றும் இடது கையில் அடித்தார். அதில் எனக்கு இடது கை மற்றும் வலது கணுக்காலில் காயங்கள் ஏற்பட்டது. அப்போது அபிஷேக் மூங்கில் தடியை அடித்து வீட்டின் மேற்கூரையில் இருந்த ஓடுகளை உடைத்துவிட்டார். விக்னேஷ் வீட்டிற்குள் புகுந்து குக்கர் மற்றும் சமையல் பாத்திரம், பீரோ ஆகியவற்றை உடைத்துவிட்டார். அதற்கு பின்னிட்டு எனது தங்கை மகன் ஸ்ரீதர், ராஜலட்சுமி ஆகியோர்கள் ஆம்னி வேன் மூலமாக என்னையும் எனது மகனையும் சிகிச்சைக்காக காங்கேயம் அரச மருத்துவமனைக்கு அழைத்துவந்தார்கள். இங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு மேல் சிகிச்சைக்காக காங்கேயம் சூர்யா மருத்துவமனைக்கு சென்றேன். எனது மகனுக்கு காதில் பலத்த காயம் ஏற்பபட்டதால் அவரை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு சிகிச்சை பெற்றுவிட்டு மீண்டும் எனது மகன் சூர்யா மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றார். தற்போது என்னிடம் காட்டப்படும் வாக்குமூல புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த வாக்குமூல புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காட்டப்படும் தென்னை மட்டைத்தான் எதிரி எனது மகனை அடிக்க பயன்படுத்தியதாகும். **அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் என்னிடம் காட்டப்படும் கல் மற்றம் இரும்பு பைப்தான் எதிரி என்னை அடிக்கப்பயன்படுத்தியதாகும். **அவை சா.பொ.2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

மாதவராஜபுரம் முத்தூர் தென் வடல் ரோட்டிற்கு கிழ புறமாக உள்ளது என்றால் சரிதான். என்னுடன் எனது மகன் பாலச்சந்திரன் உள்ளார் என்றால் சரிதான். எனது மகன் அரசு பேருந்தில் நடத்துனராக வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தென் புறத்தில் அருக்காணி அவர்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். அருக்காணி எனது பக்கத்து வீட்டுக்காரர் என்றால் சரிதான். ஆச்சியம்மாள் எனக்கு சித்தி முறையானவர் என்றால் சரிதான். ராஜலட்சுமி எனது தங்கை முறை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் எதுவும் இல்லை. சந்தியா எனது தங்கச்சி மகள் என்றால் சரிதான். அவருக்கு தற்போது திருமணம் ஆகிவிட்டது. சந்தியா என்னை பார்க்க வரும்போது எதிரிகளின் வீட்டிற்கு செல்வார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சந்தியா அபிஷேக்கிற்கு தங்கை முறை என்பது

தெரிந்துதான் நன்றாக பழகிவந்தார்கள் என்றும், அதனை எனது மகன்தான் பாலச்சந்திரன்தான் தவறாக புரிந்துகொண்டு அபிஷேக்கை அடித்தார் என்றால் சரியல்ல. அபிஷேக் எனது மகன் மீது புகார் கொடுக்க கூடாது என்பதற்காகத்தான் எனது மகன் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகள் வீட்டிற்கு தென்புறமாக மணிகண்டன் வீடு உள்ளது என்றால் சரிதான். மணிகண்டனின் அண்ணன் அர்ஜீனன் போலீசாக உள்ளார் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும், மணிகண்டனின் அண்ணன் அர்ஜீனனுக்கு இடபிரச்சனை சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். அர்ஜீனன் பொய் புகார் கொடுக்க அறிவுறுத்தியதால்தான் பொய் புகார் அளித்து அதற்க ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வீட்டிற்குள் புகுந்து பாத்திரங்களை உடைத்தார்கள் என்ற தகவலை புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் கூறியுள்ளேன். வீடியோ எடுத்து வைத்துள்ளார். வீடியோ பதிவுகளை போலீசாரிடம் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். உண்மையில் அந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும், நடைபெற்றிருந்தால் வீடியோ ஆதாரங்களை ஒப்படைத்திருப்பேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே உள்ள காயத்தை வைத்துக்கொண்டு பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.03 17:33:19 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 170/2024 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | ஆச்சியம்மாள் |
| Husband Name | : | துரைசாமி |
| Village | : | முத்தூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 75 |

Both accused are present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது முத்தூரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். ஆஜர் எதிரிகளும் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். கடந்த 2024 ஆம் வருடம் இரவு 7.00 மணியளவில் இருக்கும், தேதி மாதம் தற்போது ஞாபகம் இல்லை. அ.சா.1 வீட்டிற்கு பக்கத்தில் ஆஜர் எதிரிகள் சாந்தாமணியிடம் அவரது மகன் பாலச்சந்திரனிடம் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். எதற்காக சண்டை போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. சண்டையின்போது ஆஜர் எதிரிகள் இருவரும் சாந்தியை தென்னை மட்டையாலும், கல்லாலும் அடித்தார்கள். பாலச்சந்திரனை பைப்பால் அடித்தார்கள். அதனை பார்த்த நான் எதற்காக அடிகீறிங்க என்று கேட்டதற்கு கெல்டு தேவடியா எதுக்குடி எங்களை பார்த்து கேக்கிற என்ற சொல்லிக்கொண்டு அவளை புடிடா என்று சத்தம் போட்டார்கள். அதற்கு பின்னிட்டு நான் அழுதுகொண்டு எனது வீட்டிற்கு சென்று விட்டேன். பின்னர் சாந்தாமணி போலீசில் புகார் கொடுப்பதாக சொன்னார். பாலச்சந்திரனுக்கு முதுகில் வீக்கம் இருந்தது. சாந்தாமணிக்கு காலில் காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் காவல் நிலையம் செல்வதாக சொன்னார்கள். பின்னிட்டு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

பாலச்சந்திரன் எனது உறவினர் என்றால் சரிதான். சம்பவத்தின்போது சத்தம்கேட்டுத்தான் வந்தேன் என்றால் ஐயோ என்று சத்தம் கேட்டது வந்து பார்த்தபோது எதிரிகள் அடித்துக்கொண்டிருந்தார்கள். போலீசார் சொல்லிக்கொடுத்ததுபோல்தான் தற்போது நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நடந்ததைத்தான் கூறுகிறேன். ஆனால் போலீஸ்காரர் சொல்லிக்கொடுத்தார். பாலச்சந்திரன்தான் எதிரிகளை அடித்தார் என்றால் சரியல்ல. எதிரிகள்தான் பாலச்சந்திரனை அடித்தார்கள். பாலச்சந்திரனை தெரியும் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக எதிரிகள்தான் பலச்சந்திரனை அடித்தார்கள் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 15 பேர் இருந்தார்கள். சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அதனால்தான் அங்கிருந்தவர்கள் சம்பவத்தை தடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.1 மற்றும் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.03 17:33:27 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 170/2024 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | ராஜலட்சுமி |
| Husband Name | : | கார்த்திக் |
| Village | : | வெள்ளகோவில் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 34 |

Both Accused are present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.03.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வெள்ளகோவிலில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது பெரியம்மா ஆவார். கடந்த 2024 ஆம் வருடம் 12 ஆம் வருடம் தேதி தற்போது ஞாபகம் இல்லை. எனது பெரியம்மாவை பார்ப்பதற்காக அன்றைய தினம் வெள்ளகோவிலில் இருந்து முத்தூருக்கு சென்றிருந்தேன். அன்று காலிலையே எனது பெரியம்மா வீட்டிற்கு சென்றிருந்தேன். அன்று மாலை சுமார் 7.00 மணியளவில் எனது வீட்டிற்கு வருவதற்காக கிளம்பி வெளியே வந்தேன். அப்போது என்னை அனுப்புவதற்காக எனது பெரியம்மாவும், அண்ணன் பாலசச்சந்திரனும் வீட்டிற்கு வெளியே வந்து நின்றுகொண்டிருந்தார்கள். நான் எனது பெரியம்மா வீட்டிற்கு பக்கத்தில் உள்ள பாட்டியிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் எங்கிருந்து வந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. ஆனால் திடீரென அவர்கள் அங்கு வந்து எனது அண்ணனிடம் உன்னாலதாண்டா சந்தியா என்கூட பேசமாட்டிங்கறா என்று அபிஷேக் எனது அண்ணனை பார்த்து கேட்டதற்கு சந்தியாவும், நீயும் அண்ணன் தம்பிடா உன்கூட எப்படி பேசுவா என்று சொன்னார். அதற்கு அபிஷேக் உன்னாலதாண்டா தயோழி என்று கூறி கீழே கிடந்த தென்னை மட்டையை எடுத்து எனது அண்ணனின் காதில் அடித்துவிட்டார். உடனே நான் ஓடினேன். அருகில் இருந்த எனது பெரியம்மா எதுக்குடா அடிக்கீறிங்க என்று குறுக்காட்ட வந்தவரை கல் மற்றும் இரும்பு பைப்பை வைத்து அடித்தார்கள். நான் ஓடிச்சென்று குறுக்காட்டினேன். அப்போது அக்கம்

பக்கத்தில் இருந்தவர்களும் வந்துவிட்டார்கள். இதில் எனது பெரியம்மாவுக்கு காலில் அடிபட்டுவிட்டது. பின்னர் சிகிச்சைக்கு காங்கேயம் அரசுமருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். பின்னர் மேல் சிகிச்சைக்காக சூர்யா மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். நானும் உடன் சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் வெள்ளகோவிலில் AP புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் வீட்டில்தான் இருந்து வருகிறேன். சம்பவத்தன்று எதற்காக முத்தூர் சென்றேன் என்றால் எனது பெரியம்மாவை பார்க்க சென்றேன். எனது பெரியம்மாவை பார்க்கச்சென்று ஒரு நாள் முழுவதும் இருந்தேனா என்றால் இருந்தேன். சம்பவ சமயம் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 5, 6 நபர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்கள். அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் அருக்கா, ஆட்சியம்மா, நான், மற்ற நபர்கள் பெயர் தெரியாது. உண்மையில் நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் அவர்கள் பெயரை சரியாக கூறியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தின்போது எதற்காக சத்தம் போட்டுக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரச்சனைக்கு பின்னிட்டுத்தான் நான் காரணத்தை தெரிந்துகொண்டேன். பாலச்சந்திரன் எனக்கு என்ன முறை என்றால் எனது அண்ணன் ஆவார். சந்தியா எனது சித்தி மகள் ஆவார். சாந்தாமணி என்பவர் எனது பெரியம்மா ஆவார். எதிரி அபிஷேக் எனது சித்தி மகள் சந்தியா இருவரும் அண்ணன், தங்கை முறையில்தான் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், எனது அண்ணன் அதனை தவறாக புரிந்துகொண்டு எதிரிகளை அடித்துவிட்டார் என்றும், அந்த புகாரில் இருந்து தப்பிக்க வேண்டி, அவர்களது உறவினரான காவல் துறையை சேர்ந்த அர்ஜீனன் என்பவர் மூலம் வேண்டுமென்றே திட்டமிட்டு பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால் சம்பவ இடத்தில் இல்லாமலே அவர்களுக்கு ஆதரவாக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி தெரியாது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.03 17:33:37 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்